## மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 345/2022 | வா.சா. | : 1 |
| பெயர் | : திருமதி. சுப்பாத்தாள் | | |
| க/பெ. | : திரு. ராமசாமி | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 69 | தொழில் | : |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் 2ம் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 01-08-1966 தேதியிட்ட எஸ்.எஸ்.வெங்கட்ராமன் மற்றும் ஐவர் சொத்தை சென்னிமலைக்கவுண்டர் மகன்கள் அம்மாசைக்கவுண்டர், ராமணகவுண்டர், லட்சுமணகவுண்டர் ஆகியோருக்கு விற்பனை செய்ததற்கான பதிவுசெய்யப்பட் விற்கிரைய ஆவணத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 11-11-2020 தேதியிட்ட வாதிகளின் வழக்குரைஞர் எதிர்வாதிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிய வழக்குரைஞர் அறிவிக்கை அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 13-11-2020 தேதியிட்ட மேற்படி அறிவிக்கையை எதிர்வாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்

ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 30-11-2020 தேதியிட்ட எதிர்வாதியின் வழக்குரைஞர் வாதிகளின் வழக்குரைஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.4 ஆகவும், மேற்சொன்ன பதில் அறிவிப்புக்கு வாதிகள் வழக்குரைஞர் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிய மறுப்பு அறிவிக்கை அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும், மேற்சொன்ன மறுப்பு அறிவிக்கையை எதிர்வாதியின் வழக்குரைஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.6 ஆகவும், லட்சுமணகவுண்டரின் இறப்புச்சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.7 ஆகவும், காலம்சென்ற லட்சுமணகவுண்டரின் வாரிசு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.8 ஆகவும், விண்ணப்பள்ளி கிராமம், புதிய நில அளவை எண். 153/1A2, 153/1A5 மற்றும் 153/1A8-க்குரிய சிட்டா மற்றும் "அ" பதிவேடு ஆன்லைன் நகல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**